திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார் : தலைவரவர்களே, 3 லட்சம் செலவு செய்யப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. ஆனால் தென்காசி யிலே இனிமேல்தான் ஆரம்பிக்கப்போவதாக விவரம் தெரிகிறது. எனவே, ஆரம்பிக்கப்போவதற்கு அந்தப் பணம் ஒதுக்கப்பட்டிருக் கிறதா? அல்லது செலவு செய்யப்பட்டிருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : தென் காசிக் கோட்டத்திலும், குடுமியா மலையிலும் இந்தத் திட்டம் நிறை வேற்றப்பட அரசாங்கம் ஒப்புதல் அளித்து, நடவடிக்கைகளில் ஈடு பட்டிருக்கிறது .

கோவை நகரில் அரிசனங்களுக்கு நெருப்பு பிடிக்காத வீடுகள்

* 193 வினா—திரு. எம். பூபதி : மாண்புமிகு வேளாண்மை, அரிசனநல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) கோவை நகரில் வசதியின்றி குடிசைகளிலேயே வாழும் சுமார் 4,000 அரிசன குடும்பங்களுக்கு தமிழக அரசு நெருப்புப் பிடிக்காத வீடுகள் கட்டிக்கொடுக்க உத்தேசம் உண்டா?

(இ) இல்லையெனில், ஸ்டேட் ஹவுசிங் போர்டார் கோவை யில் கட்டிக் கொடுத்துள்ளது போல் குடியிருப்பிற்கு வகை செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : (அ) & (இ) அரிசன நலத் துறையைப் பொறுத்தமட்டில் குறைந்த மதிப் பீட்டில் தீப்பிடிக்காத வீடுகள் கட்டித் தரும் திட்டம் நடைமுறையில் உள்ளது. அது தவிர, மாநில வீட்டு வசதி வாரியம் கோவை நகரில் சில பகுதிகளில் வாழும் அரிசனங்கள் உள்பட மற்றும் குடிசை மக்களுக்காக 1,939 அங்கணங்கள் கட்டியுள்ளது. மேலும் வீட்டு வசதி வாரிய சேரி மாற்றத் திட்டத்தின் கீழ், நிதி நிலைமைக்கு ஒப்ப அதிகமான வீடுகள் படிப்படியாகக் கட்டித் தர கோவை வீட்டு வசதிப் பிரிவு திட்டங்கள் வகுத்துள்ளது.

திரு. எம். பூபதி : தலைவரவர்களே, கோவை நகரில் மிக அதிக மான இட நெருக்கடி இருப்பதாலும் அதே நேரத்தில் அரிசன மக்கள், அங்கேயே தங்கள் வேலையை உத்தேசித்து கோவையிலேயே இருக்க வேண்டியிருப்பதால் சர்க்காருக்குச் சொந்தமான இடத்திலே, அவர்களுக்கு மாடி வீடுகள் கட்டி அவர்கள் குடியிருக்க ஒரு ரூபாய் வாடகைக்குக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இப் பொழுது ஏற்கெனவே 1,939 அங்கணங்கள் கட்டப்பட்டிருக்கின்றன என்று சொன்னேன். அதிலும் குறிப்பாக உக்கடம், கள்ளமேடு, லிங்கிகவுண்டர் தோட்டம், பாளையன் தோட்டம் என்ற இடங்களிலே கட்டப்பட்டு பத்து ரூபாய் வாடகைக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதிலே லிங்கிகவுண்டர் தோட்டத்தில் 14.34 இலட்சமும், பேரூர்

1970 செப்டம்பர் 2]

ரோட்டிலே 91.33 லட்சமும் ஆகிய அளவிலே பணம் ஒதுக்கப்பட்டு ஏற்கனவே பல அங்கணங்கள் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. எனவே, சர்க்காருக்குச் சொந்தமான இடத்திலே கட்டிவிடலாம் என்றாலும்கூட, தனியார் இடத்தை எடுப்பதில் கொஞ்சம் கஷ்டமிருக்கிறது. வீட்டு வசதி வாரியம் அதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கிறது-. ஆனாலும் ஒரு ரூபாய் வாடகைக்குக் கொடுப்பது சாத்தியக்கூறு இல்லை.

திரு. என். வரதராஜன் : தலைவரவர்களே, அரிசன மக்கள் மிகப் பெரும்பான்மையாக சேரிப்புறங்களில் வீடில்லாமல் தவிப்பதன் காரணமாக, வீடு கட்டிக்கொடுக்கும் திட்டம் இன்றைக்குக் காலத்திற்கு ஒவ்வாததாக இருப்பதால் அவர்களுக்குக் குறைந்தபட்சம் 300 ரூபாய் கடனைக் கொடுத்தால் அவர்களே கட்டிக்கொள்ள முடியும் என்பதால், அந்தத் திட்டத்தில் அரசாங்கம் முதலாவதாகக் கவனம் செலுத்த இயலுமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இப்பொழுது அவர்களுக்காக 4.12 லட்சம் ரூபாய் 1970-71-ற்கு நிதி ஒதுக்கம் செய்யப்பட்டிருக்கிறது. 940 ரூபாய்க்குத் தனி வீடுகளும், 1,805 ரூபாய்க்கு இரட்டை வீடுகளும் என்ற அளவில் அரசாங்கமே கட்டக்கூடிய அளவில் திட்டமிருக்கிறது. ஆனால், 300 ரூபாய் கொடுத்தால் கட்டிக்கொள்வார்கள் என்று சொல்கிறார்கள். நான் பார்த்த அனுபவத்தில் அப்படி அவர்களால் கட்டிக்கொள்ள முடியவில்லை. மாறாக, கடனைக் கொடுத்தால் திருப்பிக் கொடுக்க முடியாத நிலையில், கடனைவாங்கி வீடு கட்டாமல் விட்டுவிடுகிறார்கள். எனவே, அரசாங்கம் அந்தத் திட்டத்தை கைவிட்டுவிட்டது. ஏற்கெனவே அரசாங்கம் 1,000 ரூபாய் அவர்களுக்குக் கொடுக்கும் திட்டத்திற்கு ஒப்பளித்திருந்தும், அதையும் சரியாகக் கட்டாமல், இடிந்து விழக்கூடிய நிலை ஏற்பட்டது. எனவே, இப்பொழுது அரசாங்கமே கட்டிக்கொடுக்கும் முறையில் ஈடுபட்டிருக்கிறது.

திரு. அ. ஆறுமுகம் : தலைவரவர்களே, இந்தத் திட்டங்களை கிராமங்களில் விரிவுபடுத்த உத்தேசமுள்ளதா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : கிராமப் பகுதிகளுக்கு அதிகமாக இன்றைக்குச் செய்துகொண்டு வருகிறோம்.

திரு. டி. மார்டின் : பேரவைத் தலைவரவர்களே, அநேக அரிசன காலனிகளில் மின்சார விளக்குகள் இல்லாமலிருப்பதால் அவர்கள் மிகவும் இன்னலடைவதால் உடனடியாக அரசு, ஏற்கெனவே அமைத்த அரிசன காலனிகளுக்காவது குறைந்தபட்சம் தெருவிளக்குகளாவது அமைத்துக்கொடுக்க முன்வருவார்களா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இடம் கொடுப்பதற்கே எவ்வளவோ சங்கடங்கள் இருக்கின்றன. அதற்குப் பிறகுதான் மின்சாரத்தைப்பற்றிக் கவனிக்க வேண்டும். அதிகப்படியான வீடுகள் கட்டுவதிலே நாம் அக்கறை கொள்ள வேண்டும்,

மாண்புமிகு உறுப்பினரவர்களும் அக்கறை கொள்ள வேண்டும். நிலம் கையகப்படுத்துகின்ற நேரத்தில் மாண்புமிகு உறுப்பினரவர்களும் ஒத்துழைப்பு தர வேண்டும்.

திரு. எம். பூபதி: மாண்புமிகு அமைச்சரவர்கள் 4, 5 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட அந்த வீடுகளைப்பற்றிச் சொன்னார்கள். இப்பொழுது 4,000-க்கு மேற்பட்ட அரிசன மக்கள் குடிசைகளில் வாழ்கிறார்கள். அவர்களுக்காகத் தக்க நடவடிக்கை எடுப்பார்களா, அதற்கு விளக்கம் கூறுவார்களா என்று அறிய விருமபுகிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: அதைத் தான் இரண்டாவது முறையாகக் கூறும்பொழுது சொன்னேன். 4.12 லட்சம் ரூபாய் இந்த ஆண்டிற்காக நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறோம். அந்தத் திட்டத்தில் 940 ரூபாய்க்கு தனி வீடுகளும், 1,805 ரூபாய்க்கு இரட்டை வீடுகளும் என்ற திட்டமிருக்கிறது. மாவட்ட நல அதிகாரிகள் அதற்குரிய இடங்களைத் தேர்ந்தெடுத்து அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள். கட்டட வேலைகளும் சிலயிடங்களில் துவக்கப்பட்டிருக்கிறது. வேறு ஒரு கேள்வி போட்டால் எந்தெந்த மாவட்டத்தில் எத்தனையிடங்கள் கட்டியிருக்கிறோம் என்ற முழு விவரங்களைச் சொல்ல முடியும்.

அரிசன குடியிருப்புகளுக்கு பாதை வசதி

* 194 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு வேளாண்மை, அரிசனநல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் ஊராட்சி ஒன்றியப் பகுதியில் 1967 முதல் ஹரிஜனப் பகுதி மக்களிடமிருந்து பாதை வசதி கோரி கோரிக்கைகள் எவையேனும் வந்துள்ளனவா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: ஆம்.

இந்த மனுக்கள் பரிசீலனையில் உள்ளன.

முற்பகல் 9·30

திரு. நா. கிருட்டிணன்: இத்தகைய தாழ்த்தப்பட்ட மக்கள் குடியிருப்புகளுக்குச் சாலை வசதி செய்து கொடுப்பதற்காக தனியார் நிலத்தைக் கையகப்படுத்தும் நிலைமை ஏற்படும்போது தனியார் நிலத்தைக் கொடுக்க மறுக்கிறார்கள். பொதுநோக்கத்தைக் காரணமாகக் கொண்டு கட்டாயமாக அந்த நிலங்களைக் கையகப்படுத்த அரசு முனைந்து செயல்படுத்துமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: அப்படிப்பட்ட கட்டாய முறை இன்றைக்கும் இருக்கிறது. அந்த விதிமுறைகளின் கீழ் நிலங்களை எடுத்துக் கொள்ளும்போது அவர்கள் வழக்கு மன்றத்திற்குச் செல்லுகிறபோது அரசாங்கமும் வழக்கு மன்றத்திற்குச் சென்று வாதாடுகிறது.

திரு. கொ. இர. ஞானசம்பந்தன்: அரிசனங்கள் குடியிருப்புக்குப் போவதற்கு, மயானத்திற்குச் செல்லுவதற்கு வழி இல்லாமல் பல இடங்களில் நிலப் பிரபுக்கள் வேலி வைத்து அடைத்து